# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 27 வியாழக்கிழமை 10.07.2025 கதிர் 250











# செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 65 எலும்புக்கூடுகள் மீட்பு

## அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 65ஆக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த 15 நாட்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில், இன்றைய தினம் வியாழக்கிழமை மதியத்துடன் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மீள அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் இரண்டாம்கட்ட அகழ்வு பணியின் 15ஆம் நாள் பணி இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது, புதைகுழிகளில் அடையாளம் காணப்பட்ட 65 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

7

## பால் மாவின் விலை அதிகரிப்பு!




கொழும்பு, ஜூலை 10

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன்

7

## பொரளையில் துப்பாக்கி சூடு நபர் கைது




கொழும்பு, ஜூலை 10

பொரளை பகுதியில் வு56 துப்பாக்கியால் சுட்டு கொலை முயற்சிகுற்றத்திற்கு உதவிய மற்றும் உடந்தையாகஇருந்த சந்தேக நபர் புதன்கிழமை அன்று வெல்லம்பிட்டிய பகுதியில் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் நிக்கவெரட்டியவைச் சேர்ந்த 35 வயதுடையவர்.

சந்தேகநபர் 15 கிராம் 180 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார்.

## தையிட்டியில் ஆர்ப்பாட்டம்



தையிட்டி, ஜூலை 10

யாழ். தையிட்டியில் பொது மக்களின் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று வியாழக்கிழமை அன்று முன்னெடுக்கப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை மாலை ஆறு மணி வரை இடம்பெறும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர்.

7

## கீரிமலையில் வெடிகுண்டு மீட்பு!



யாழ்ப்பாணம, ஜூலை 10

யாழ்ப்பாணம்- கீரிமலைப் பகுதியில் வெடிகுண்டு மீட்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வெடிகுண்டு கீரிமலை - புது கொலணி பகுதியில் உள்ள தனியார் காணியொன்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறித்த பகுதியிலுள்ள தனியார் காணி யொன்றில் வெடி குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந்தநிலையில், தெல்லிப்பழை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸ்

7

## களுத்துறை நகர அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



கொழும்பு, ஜூலை 10

மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு இடையிலான பிரதான நகரமாக களுத்துறை நகரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

நாட்டில் தொழிற்துறை மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்ட களுத்துறை நகரத்தை பரந்த அபிவிருத்திக்கு உட்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் களுத்துறை நகர அபிவிருத்தித் திட்டத்தை விரைவாக செயற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இங்கு அனைத்துத் தரப்பினரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது.

சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொண்டதன் பின்னர், பிரதான நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் மற்றும் வினைத்திறன் மிக்கதாக்குவது குறித்தும், அதன் மூலம் களுத்துறை நகரில் தற்போது இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து நிறுவனங்களுக்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தெற்கு அதிவேகப் பாதையில் அண்மித்த இடத்திலிருந்து களுத்துறை நகரத்துக்கான நுழைவாயில் ஒன்றை உருவாக்குதல், களுத்துறை நகரத்திற்கான பிரவேச வீதி கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், களுத்துறை நகரத்தை வலயங்களாக பிரித்து அபிவிருத்தி செய்தல் ஆகிய விடயங்கள் குறித்து இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், விசேட கவனம் செலுத்தப்படுகிறது (ஐ)

## ராஜபக்சக்கள் ஆட்சியை மீளக் கைப்பற்றவே ஈஸ்டர் தாக்குதல் சூழ்ச்சி



கொழும்பு, ஜூலை 10

ராஜபக்சக்கள் ஆட்சியை மீளக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கில் ஈஸ்டர் தாக்குதல் சூழ்ச்சியை முன்னெடுத்தனர் என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. போக்குவரத்து அமைச்சர் பிமல் ரட்நாயக்க இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

கடந்த 2015ம் ஆண்டில் ராஜபக்சக்கள் தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் பின்னர், மீண்டும் ஆட்சியை கைப்பற்றிக்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்க பல முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஒரு பக்கம் மைத்திரி – ரணிலுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியதுடன் மறு பக்கம் இனவாத அடிப்படையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் விரோத, சிங்கள இனவாத அமைப்புக்களை திட்டமிட்ட அடிப்படையில் ராஜபக்சக்கள் உருவாக்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூகத்தில் இனவாத கருத்து திணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன் கட்டமாக இந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சூழ்ச்சித் திட்டத்தை கருத முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு கடந்த ஆண்டில் கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணையைப் போன்றதொரு மக்கள் ஆணை மைத்திரி அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் ராஜபக்சக்களினால் மீண்டும் அரசியல் மேடைகளில் ஏற முடியாத சூழ்நிலை உருவானதாகவும் அதனை முறியடிக்கும் நோக்கில் இனவாத அரசியல் மேற்கொள்ளப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் ஊடாக இனவாத சிங்கள மற்றும் இனவாத முஸ்லிம் அமைப்புக்களை ராஜபக்சக்கள் உருவாக்கி பராமரித்தனர் என பிமல் ரட்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ)



# விவசாயிகளுக்கு நிரந்தர தீர்வு: அவையில் சிறீதரன் எம்.பியின் கோரிக்கை

விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வை வழங்குமாறு தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத்தலைவர்சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் இன்றைய(09) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,


“விவசாய மாவட்டமான யாழ்ப்பாணத்தில் நெற்செய்கைக்கு மேலாக உப உணவுப் பயிர்களான சின்ன வெங்காயம், வேதாளக்காய் வெயங்காயம், உருளைக்கிழங்கு, திராட்சை, கரட், கரணைக்கிழங்கு, பீற்றூட், வாழை, மரவள்ளி, மிளகாய் போன்ற பயிர்கள் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி கிழக்கு, தீவகம், தென்மராட்சி போன்ற பெரும்பிரதேசங்களின் பேரூர்களில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இவ்வூர்களில் வாழும் விவசாயிகள் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்து, அறுவடை செய்யும்போது இறக்குமதி வரிவிதிப்பு செய்யப்படுவது வழமை. ஆனால் கடந்த மூன்று வருடங்களாக இவ்வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

காலநிலைப் பாதிப்புகளையும் கடந்து உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் யாழ்ப்பாண விவசாயிகளின் நடைமுறை இடர்பாடுகள் எவை என்பதையும், யாழ்ப்பாணச் சின்ன வெங்காயத்துக்கான கேள்வி தற்போது வெகுவாகக் குறைந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக உற்பத்திக்கான மானிய அடிப்படையிலான விதை உருளைக்கிழங்கு கிடைக்கப்பெற வில்லை. இத்தகைய காரணிகளால் விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்படும் காலத்தில், விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் அரசால் இறக்குமதிகளுக்கு எதிரான வரி விதிக்கப்படுமா? என்பதையும், கடந்த மூன்று ஆண்டுகளாக ஏன் இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும் அமைச்சர் சபைக்கு அறிவிக்க வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார். (ஐ)






# யூரியூப் வீடியோ கட்டணங்களில் மாற்றம்!

கொழும்பு, ஜூலை 10

யூடியூப் வலைத்தளத்தில் பதிவிடும் வீடியோக்களுக்கு வழங்கப்படும் கட்டணங்களில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மாற்றம் ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பெருமளவில் தயாரிக்கப்பட்ட, மீண்டும் மீண்டும் வரும் அல்லது குறைந்த முயற்சியுடன் வீடியோக்களை வெளியிடும் சேனல்களின் வருவாயைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்தகைய உள்ளடக்கத்தை அடையாளம் காணவும், வருவாய் ஈட்டுவதைத் தடுக்கவும் தளம் அதன் லுழரவுரடிந கூட்டாளர் திட்டத்தின் வழிகாட்டுதல்களைப் புதுப்பித்துள்ளது.

புதிய லுழரவுரடிந பணமாக்குதல் விதிமுறைகள் தொடர்பில் அதன் உத்தியோகபூர்வ ஆதரவு பக்கத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

YouTube “YouTube கூட்டாளர் திட்டத்தின் ஒரு பகுதியாக பணமாக்குவதற்கு, படைப்பாளர்கள் எப்போதும் ‘அசல்’ மற்றும் ‘உண்மையான’ உள்ளடக்கத்தைப் பதிவேற்ற வேண்டும் என்று கோரியுள்ளது.

ஜூலை 15, 2025 அன்று, பெருமளவில் தயாரிக்கப்பட்ட மற்றும் மீண்டும் மீண்டும் வரும் உள்ளடக்கத்தை சிறப்பாக அடையாளம் காண லுழரவுரடிந எங்கள் வழிகாட்டுதல்களைப் புதுப்பிக்கிறது.

இந்தப் புதுப்பிப்பு இன்று ‘நம்பகமற்ற’ உள்ளடக்கம் எப்படி இருக்கிறது என்பதை சிறப்பாக பிரதிபலிக்கிறது.

YouTube பணமாக்குதலை அங்கீகரிக்க எவ்வளவு நேரம் எடுக்கும் புதுப்பிக்கப்பட்ட கொள்கை, படைப்பாளிகள் லீ இல் சேர தகுதித் தரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கோருகிறது.

ஒரு சேனலில் குறைந்தது 1,000 சந்தாதாரர்கள் இருக்க வேண்டும், கடந்த ஆண்டில் 4,000 செல்லுபடியாகும் பொதுப் பார்வை நேரங்கள் அல்லது கடந்த 90 நாட்களில் 10 மில்லியன் செல்லுபடியாகும் பொதுக் குறும்படப் பார்வைகள் இருக்க வேண்டும் என்றுள்ளது. (ஐ)

# சிறுவர்கள் டெங்கு நோயால் அடையாளம்

கொழும்பு, ஜூலை 10



நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 27 சதவீதமானோர் சிறுவர்கள் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 226 பாடசாலைகள் நுளம்பு மற்றும் நுளம்புக் குடம்பிகள் பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 27 சதவீதமானோர் சிறுவர்களாவர்.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்தின் “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்துக்கமைய நேற்று முதல் அனைத்து பாடசாலைகளிலும் சுத்தம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தின் போது சுமார் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 250 இடங்கள் அதிகாரிகளினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன்,

இதன்போது 35 ஆயிரத்து 495 பகுதிகள் நுளம்புகள் பல்கிப் பெருகக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 4,275 பகுதிகளில் நுளம்புக் குடம்பிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

அத்தோடு 3812 சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், 982 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 25 சதவீதமான வீடுகள் டெங்கு அபாயமிக்க இடங்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது வீடுகள் ஓரளவு பாதுகாப்பான நிலைமையில் உள்ளது. என்றார். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் பெண் கைது



*கிண்ணியா, ஜூலை 10*

*கிண்ணியாவில் 12420 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை, விற்பனை செய்வதற்காக உடமையில் வைத்திருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*குறித்த பெண் நேற்றிரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*கிண்ணியா - மகரூப் பிரதேசத்தை சேர்ந்த, 57 வயதான குடும்ப பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.*

*கிண்ணியா பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற, இரகசிய தகவலின் அடிப்படையில், சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என கிண்ணியா குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.*

*மேலதிக நடவடிக்கைகளுக்காக, சந்தேகநபரை நாளைய தினம் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தவுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.(ஐ)*

# வரட்சியான வானிலையால் நீர் விநியோகத்தில் சிக்கல்!

கொழும்பு, ஜூலை 10

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, நீரை முடிந்தவரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

நிலவும் வறட்சியான காலநிலையினால் முக்கிய நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருவதோடு, நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

எனவே, குடிநீர் விநியோகம் குறைவாக இருப்பதால், அனைவரின் அத்தியாவசிய குடிநீர் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை கழுவுதல் மற்றும் தோட்டக்கலை உள்ளிட்ட அத்தியாவசியமற்ற நடவடிக்கைகளுக்கு நீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அத்தியாவசிய அன்றாட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் சபை கோரியுள்ளது.

நுகர்வோரின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மலைப் பகுதிகளில் உள்ள நுகர்வோருக்கு நீர் விநியோகம் குறைந்த அழுத்தத்தில் இடம்பெறலாம்.

இந்த வறட்சியான மற்றும் சீரற்ற வானிலை காரணமாக பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை வருத்தம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு 1939 என்ற துரித இலக்கத்திற்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சங்கிகளின் கூடாரம் மகிழவே பேசுகிறார் எடப்பாடி பழனிசாமி: அமைச்சர் சேகர்பாபு



சங்கிகளின் கூடாரம் மகிழ்ச்சி அடைய வேண்டும் என எடப்பாடி பழனிசாமி பேசுகிறார் என அமைச்சர் சேகர்பாபு கூறினார். கோவில் நிதியை கொண்டு கல்லூரிகள் அமைப்பது எந்த விதத்தில் நியாயம்? என எடப்பாடி பழனிசாமி பேசியதற்கு அமைச்சர் சேகர்பாபு விளக்கம் அளித்து கூறியதாவது

திருக்கோவில்கள் சார்பில் 25 பள்ளிகள், 1 பாலிடெக்னிக் கல்லூரி, 9 கலை அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இதில் 22,455 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். 19 திருக்கோவில்களில் மருத்துவமனைகள் தொடங்கியுள்ளோம். உணவு, கல்வி, மருத்துவத்திற்கு அதிக கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தி வருகிறது. 1,000 ஆண்டுகளுக்கு முன்பே கோவில்களில் கல்விச்சாலையும், மருத்துவ சாலையும் மன்னர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகம் கோவில் கட்டடக்கலையை கொண்டு கட்டிக்கொள்ளலாம் என சட்டத்தில் இடம் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின்படி கல்வில் நிலையங்கள் தொடங்கியுள்ளோம். கேரளா, ஆந்திரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் கோயில் நிதியில் கல்லூரிகள் இயங்குகின்றன. இந்து சமய அறநிலையத்துறை கல்லூரிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள்தான் பயில்கின்றனர்.

திமுக ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 4 கல்லூரிகள் தொடங்கப்பட்டு 2,500 பேர் படிக்கின்றனர் சோழர்கள் காலத்தின் கூட கோயில் சார்பில் கல்விச் சாலைகள் இருந்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்து சமய அறநிலையத்துறை அறப்பணியுடன், அறியாமையை நீக்கும் கல்வி பணியையும் செயல்படுத்தி வருகிறது.

எம்ஜிஆர், ஜெயலலிதா ஆட்சி காலத்திலும் அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் திறக்கப்பட்டன, இதுவும் சதிச் செயலா? அதிமுக தலைவர்களை இபிஎஸ் ஏற்கவில்லை என தெளிவாகத் தெரிகிறது. பாஜக எனும் மலைப்பாம்பு அதிமுகவை சிறுக சிறுக விழுங்கி வருகிறது. அதிமுக எம்எல்ஏ அம்மன் அர்ஜ/னன் மருதமலை கோயில் சார்பாக பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க வேண்டும் கோரிக்கை வைத்தார்.

அதிமுக எம்எல்ஏக்கள் பெரியபுள்ளான், அமுல் கந்தசாமி, ராஜன் செல்லப்பா உள்ளிட்டோர் கோயில் சார்பில் கல்லூரி வேண்டும் என சட்டப்பேரவையில் கோரிக்கை வைத்துள்ளனர். சங்கிகளின் கூடாரம் மகிழ்ச்சி அடைய வேண்டும் என எடப்பாடி பழனிசாமி பேசுகிறார். வரலாறு தெரியாமல், சங்கிகள் வைக்கும் கோரிக்கையை இபிஎஸ் வெளிப்படுத்துவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது" இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசியது குறித்து அமைச்சர் சேகர்பாபு பதில் அளித்துள்ளார். (ஐ)

## சட்டவிரோத சூதாட்ட செயலி விளம்பரத்தில் நடித்த 29 நடிகர்கள் மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு



சட்டவிரோத சூதாட்ட செயலி விளம்பரத்தில் நடித்த 29 நடிகர்கள் மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது. விஜய் தேவரகொண்டா, ராணா டகுபதி, நிதி அகர்வால், பிரனிதா சுபாஷ், மஞ்சு லட்சுமி உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.



## அருப்புக்கோட்டையில் கண்டெய்னர் லொறி மீது வான் மோதி 3 பேர் சாவு

அருப்புக்கோட்டையில் கண்டெய்னர் லாரி மீது வேன் மோதி 3 பேர் உயிரிழந்தனர். மதுரை-தூத்துக்குடி 4 வழிச்சாலையில் அருப்புக்கோட்டை அருகே கண்டெய்னர் லாரி ஒன்று சென்று கொண்டிருந்து. அதற்கு எதிரே வேன் ஒன்று வந்து கொண்டு இருந்தது. இந்நிலையில் இந்த 2 வாகனங்களும் வேகமாக சென்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இரு வாகனங்களின் ஓட்டுனர்கள் உட்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து உயிரிழந்தனர்.

இதில் 2 வாகனங்களும் நொறுங்கி சேதமானது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து தகவல் அறிந்து வந்த காவல்துறையினர் பொக்லைன் மூலம் சேதமடைந்த வாகனங்களை அப்புறப்படுத்தினர். இந்த விபத்திற்கான காரணம் என்ன என்பது தற்போது வரை தெரியவில்லை. விபத்து குறித்து அருப்புக்கோட்டை காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## ஆதி திராவிடர் நலத்துறை அரசு பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகள் ஆய்வகங்கள் அமைக்க சன் டிவி ரூ.3.50 கோடி நிதி உதவி

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் அமைப்பதற்காக சன் டி.வி. 3 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, கடலூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் 46 அரசுப் பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களை அமைக்க, பால ரக்ஷா பாரத் என இந்தியாவில் அழைக்கப்படும் சேவ் த சில்ட்ரன் அமைப்புக்கு சன் டி.வி. 3 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை, அந்த அமைப்பின் தலைமை செயல் அலுவலர் சாந்தனு சக்ரவர்த்தியிடம் சன் டிவி சார்பில், மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் ஆகியோர் வழங்கினர்.

கற்பித்தல் முறையை மேம்படுத்தும் வகையில் கடலூர் மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் 46 அரசுப் பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகள் மற்றும் சோதனைக் கூடங்கள் உள்ளிட்ட வசதிகள் அமைக்க இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று பால ரக்ஷா பாரத் அமைப்பின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 118 அரசுப் பள்ளிகளிலும், ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் உள்ள அரசுப் பள்ளிகளிலும் இதுவரை 10 கோடியே 30 லட்ச ரூபாய் நிதியில் அதி நவீன ஸ்மார்ட் வகுப்பறைகள், ஆய்வகங்கள் உள்ளிட்ட வசதிகள் சன் டி.வி. நிதி உதவி மூலம் செய்து தரப்பட்டுள்ளன.


இதன் மூலம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி மீதான ஆர்வம் அதிகரித்துள்ளதாகவும், மாணவர்களின் கற்றல் அனுபவம் இனிமையாக மாறியுள்ளதாகவும் கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்த, 'சேவ் த சில்ட்ரன்' அமைப்புக்கு, கடந்த 4 ஆண்டுகளில் 13 கோடியே 80 லட்சம் ரூபாய் நிதி உதவியை சன் டி.வி. வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அறிவின் படிநிலைகளை உயிர்ப்போடு வையுங்கள்!

**-மாயா**






மேலோட்டமாகப்பார்த்தால் ஒன்றுமில்லையென்று தோன்றினாலும் மிகத்தீவிரமான ஒரு சிக்கல் குறித்து பேசலாம் என்று தோன்றியது. தமிழ்பட்டிமன்ற வடிவில் சொல்வதென்றால் 'செய்யறிவு **(AI – Artificial Intelligence)** வரமா சாபமா' என்பதுதான் தலைப்பு.

பட்டிமன்ற நடுவராக இருந்தால் கண்டிப்பாக ஏஐ வரமே என்று சொல்லி அணு ஆயுதத்தை எடுத்துக்காட்டாக்கி கண்டுபிடிப்புகள் எந்நாளும் சாபமல்ல அதைத் தவறாகப் பயன்படுத்தும் மனிதன் தான் மகத்தான சல்லிப்பயல் என்று முடித்துவிடலாம். ஆனால்விஷயம் அப்படி எளிதாகக் கடந்து விடக்கூடிய சிக்கல் அல்ல.

'அப்படி என்ன உலகமா அழியப் போகிறது ' என்று கேட்கிறீர்களா?

உலகம் அழிவதென்றால் என்ன? இயற்கை சீற்றத்தால் மண்ணும் மரமும் சரிவதா? எத்தனையோ ஆயிரக்கணக்கான காடுகள் அழிந்துவிட்டன நதிகள் காணாமல் போய்விட்டன பனி மலைகள் மறைகின்றன. ஏன் இனங்களே இல்லாமல் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. இதற்கெல்லாம் உலகம் அழிகிறதென்று நாம் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லையே. ஒரு துணுக்குச்செய்தியாக அதைக்கடந்து விடுகிறோம். நமக்கு உலகம் அழிவதென்றால் நாம் அழிதல் அதாவது மானுடம் அழிவது. நம்மைப்பொருத்தவரை மனிதன் இல்லாவிட்டால் உலகமில்லை. சரி, மானுடம் அழிவதென்றால் என்ன? மனிதர்கள் இறப்பதா? வெறும் உடல் உயிர் அழிவது அழிவென்றால் அறிவு அழிவதை என்னவென்று சொல்வீர்கள்?

ஆம், ஏஐ மூலமாக நாம் மெல்ல மெல்ல தொலைத்துக் கொண்டிருப்பது நமது அறிவை, நமது சிந்தனைத்திறனை **(cognitive skills)>** நமது படைப்பாற்றலை.

**AI isn't just taking over work—it's taking over thought and at great speed.**

'எல்லாக் கண்டுபிடிப்புகளுக்கும் பழமைவாதிகள் இப்படி ஏதாவது சாக்கு சொல்வது வழக்கம்தான். நீங்கள் புதுமைகளுக்கு எதிரியா? உங்களுக்கு ஏஐ உதவவில்லையா' என்று கேட்கிறீர்களா?

ஒரு கணினிப்பொறியாளராக, தொடர்ந்து புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திப்பார்க்க முயற்சிக்கும் நுகர்வாளராக, ஒரு பயனர் அனுபவ நிபுணராக என்று பலவழிகளில் எனக்குச் செய்யறிவு பெருந்துணை செய்கிறது என்பதே உண்மை. கார்ப்பரேட் பேச்சு வழக்கில் சொல்வதானால் செய்யறிவு எனது வேலை நேரத்தைஃபணிச்சுமையை 5ஒ குறைத்திருக்கிறது. ஒரு சிறுதொழில் நிறுவனராக என் வேறுபல சிக்கல்களுக்கான பெரும் வடிகாலாகவும் அது இருக்கப்போகிறது. பிறகு ஏன் இப்படிச்சொல்கிறேன் என்கிறீர்களா? காரணம் நமது அடிப்படைச் செயல்திறன் தொலையும் வேகம்.

'அப்படியென்றால் ஏஐ வேண்டாமா?' ' கண்டிப்பாக வேண்டும்.' 'என்ன தான் சொல்கிறீர்கள்?' என்று கேட்கிறீர்களா?

சுருக்கமாகச்சொன்னால் செய்யறிவு வளர்வது சிக்கலல்ல, செய்யறிவால் நாம் குறுகுவதுதான் சிக்கல். எல்லாக் கண்டுபிடிப்புகளும் மனிதனுக்கு உதவுவதும் அல்லாததும் பயன்பாட்டைப்பொருத்துத்தான். கணினியை நினைத்துப்பாருங்கள். அது வந்தபோது கூடப் பெரும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. ஆனால் கணினிகளும் இன்னபிற இயந்திரங்களும் மனிதனின் வேலையைச் சுலபமாக்கியதன்றி வாழ்க்கை தரத்தையே மாற்றியமைத்தன. புதிய துறைகளையே உருவாக்கின. அதே போலத்தான் செய்யறிவு செய்யப்போகிறது. நம் வாழ்க்கை முறையில் நுகரும் கலாசாரத்தில் என்று எல்லா வகையிலும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை உருவாக்கப்போகிறது என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் அதே வேளையில் அதைப்பயன்படுத்தும் நம் திறன் மற்றும் பொறுப்பு குறித்தும் மறந்துவிடக் கூடாது. கல்குலேட்டர் திறன்பேசிகளில் வந்தபிறகு பலரும் கணக்குப்போடுவதை மறந்துவிட்டோம் அல்லது வேகம் குறைந்துவிட்டோம். எத்தனை பேருக்குப் பத்து அலைபேசி எண்களுக்கு மேல் நினைவிருக்கிறது. அப்படித்தான் செய்யறிவும் நம் பணியை இலகுவாக்குகிற வேளையில் நம் திறனைக் குறைக்கத் தொடங்கியிருக்கிறது.

'ஏன் இதெல்லாம் ஒரு பிரச்சினையா? ஏஐ எத்தைகைய பெரும் சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் பதில் தருகிறது' என்கிறீர்களா?

ஆம், உண்மை தான். சிக்கலின் ஆதாரப்புள்ளியும் அது தான்.

**We want solutions fast and we dont want to spend time experimenting and solving issues**. பரிசோதனை செய்வதற்கும், சிக்கல்களைச் சமாளிப்பதற்கும் நேரம் வேண்டாம் ஆனால் தீர்வு மட்டும் வேண்டும் நமக்கு. அங்கேதான், அறிவு அழிக்கப்படத் தொடங்குகிறது. அதெல்லாம் சும்மா உாயவபிவ பயன்படுத்துவதாலெல்லாம் அறிவு அழியாது என்று உண்மையாகவே நீங்கள் நம்புகிறீர்களா?

அறிவின் 6 படிநிலைகளாக **(bloom's taxonomy)** சொல்லப்படுவன:

1. நினைவு **(remember)**
2. புரிதல் **(understand)**
3. பயன்பாடு **(apply)**
4. ஆய்வு **(analyse)**
5. மதிப்பீடு **(evaluate)**
6. புதுமை **(create)**

இதில் முதல் படி - நினைவு. நினைவு என்பது வெறும் தகவல் பெட்டகமல்ல அது ஒரு நெட்வொர்க் என்கிறார்கள். அதாவது புதிய தகவல் கொண்டு ஏற்கனவே இருக்கும் பழைய தகவலைக்கண்டடைந்து பொருளுணர்தல். அறிவின் அடிப்படைத் தளமே அது தான். நமக்கு அதுவே இப்போது முடிவதில்லை. அதையே அவுட்சோர்ஸ் செய்கிறோம்.

இதனால் என்ன ஆகும்? அறிவின் அடுத்த நிலையான புரிதல் தட்டையாகும். கற்றலும் தட்டையாகும். ஒன்றைப்புரிவதற்கு அதை நன்றாக அறிந்திருக்க வேண்டுமில்லையா? அடுத்த படி பயன்பாடு. 'கற்றபின் நிற்க அதற்குத்தக' என்று படித்திருக்கிறோமா. இங்கே கற்றல் தட்டையாகும்போது பயன்பாடும் பயனற்றதாகிறது. கற்றதை நினைவில் வைத்துத்தான் ஒரு சிக்கலுக்கான தீர்வைக் கண்டடைய முடியும். கற்றலும் புரிதலும் மெலிதாகிறபோது தீர்வு கண்டடைய பொறுமை இருக்குமா? அதற்கும் வேகமாகச் செய்யறிவை நாடிவிடுவோம். சட்டெனச்சொல்லுங்கள் இப்போதே பெரும்பான்மை தேடல்களில் இந்த நிலையை அடைந்துவிட்டீர்கள் தானே? எல்லாவற்றுக்கும் "ஈநல உாயவபிவ, ஈநல யடநலூ" தானே?

இந்த நிலை தொடர்ந்தால் அதாவது சின்னச்சின்ன தீர்வுகளுக்குக்கூட செய்யறிவைத்தேடும் நிலை தொடர்ந்தால் என்ன ஆகும்? சிந்திக்கவேண்டுமென்ற அடிப்படை எண்ணம் கூட இருக்காது. அதனால் என்ன ஆகும்? செய்யறிவு தந்த தீர்வே சிறப்பு என்று அப்படியே நம்புவோம். அந்தப் பதில்ஃதீர்வு ஏன் எப்படி வந்ததென்று தெரியாது (இன்றைய ஏஜைந உழனைபை யார் வேண்டுமானாலும் ஒரு மென்பொருளையே செய்யறிவிடம் உருவாக்கி வாங்கிவிட முடியும். ஆனால் அடிப்படை அ,ஆ கூடத்தெரியாது. ஏதாவது சிக்கல் இருந்தால் ஊநடிரப செய்யத்தெரியாது. சிக்கல் இருப்பதே தெரியாது.)

இந்த முதல் மூன்று நிலைகளிலேயே நாம் செய்யறிவிடம் சிக்கிவிட்டால் நான்காவது: ஆய்வு - அதெல்லாம் வாய்ப்பே இல்லை. அதுதான் மொத்தமாக மூளையை அவுட்சோர்ஸ் செய்தாகிவிட்டதே!

ஐந்தாவது: மதிப்பீடு - ஒரு தகவல் அல்லது தீர்வைச் சீர்தூக்கிப்பார்க்கத் தேவையான அடிப்படைத்திறன் எல்லாமே குறைந்துபோன நிலையில் செய்யறிவு கொடுக்கும் தீர்வே சிறப்பு என்று தேங்கி நின்றுவிடுவோம். ஏற்கனவே இந்தச் சீர்தூக்கிப்பார்க்கும் பழக்கமெல்லாம் விட்டுப்போய்ப் பலகாலமாகி விட்டது. யார் என்ன சொன்னாலும் நம்பும் வாட்ஸப் வாழ்க்கைக்கு ஏற்கனவே பழகிவிட்டோம். ஆக இவைகளெல்லாம் போய்விட்டால் இறுதிப்படியான புதுமைஃபடைப்பாற்றல் எப்படி இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

எதிலுமே தனித்துவம் இருக்காது.

இப்படியே போனால் என்ன ஆகும்? பின்னால் ஓர் எளிய சிந்தனையைக்கூட மனதுக்குள் கோக்கத்தெரியாத நிலை வந்துவிடும். தனக்கென ஒரு குரல் இருக்கிறது என்பதே தெரியாத நிலை ஏற்படும்.

ஒரு விஷயம் தோன்றுகிறது. அதை எப்படி எடுத்துச்சொல்வது என்று போராடுகிறோம் பாருங்கள்! 'என்ன சொல் பயன்படுத்துவது, எப்படி அழகாக்குவது,' இந்த இயல்பான செயல்தான் டிசயவை டீரடைனவைெ. இதைத்தான் இழந்துவிடக்கூடாதென்கிறேன். ஏற்கனவே ஒருபுறம் கட்டற்ற ஸ்வைப் கலாசாரத்தால் டிசயவை சழுவ ஆகிக்கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு நீளமாகப் பேசி என்ன தான் சொல்ல வருகிறீர்கள். என்று இன்னும் நீங்கள் கேட்பீர்களானால்:

அறிவின் ஆறு படிநிலைகளையும் எப்போதும் உயிர்ப்போடு வைத்துக்கொள்ளுங்கள் என்கிறேன். உங்கள் அறிவைப்பயன்படுத்துங்கள் செய்யறிவை உதவிக்கு 'மட்டும்' வைத்துக்கொள்ளுங்கள் என்கிறேன்.

ஒன்றைத்தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். செய்யறிவு ஒன்றும் உண்மையான அறிவாளி அல்ல. அது தனக்குக்கொடுக்கப்பட்ட தரவுகளை மட்டும் வைத்துச் சிந்திப்பது போலச்செய்யும் அஐஅஉசல யசவளைவ. அதற்கு உழஅிடநஒ சநயளழைெை எல்லாம் வராது. அதை அந்தளவிலேயே வைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் அறிவோடு எப்போதும் தொடர்பிலிருங்கள். சிந்தப்பது அழகு. உடற்பயிற்சி போலச்சிந்தனைப்பயிற்சியும் தேவை. எப்போதும் அதைக் கைவிடாதீர்கள். பிள்ளைகளோடு தொடர்ந்து உரையாடுங்கள். அறிவின் மகத்துவம் சிந்திப்பதன் அழகு அதன் வெகுமதி பற்றித் தொடர்ந்து சொல்லுங்கள்.

தீர்வுகள் முக்கியமல்ல போராட்டங்கள்தான் முக்கியம்.

அழகிய அவுட்புட் அவசியமல்ல தப்பும் தவறுமாயினும் அவுட்புட் உங்களுடையதாக இருப்பது அவசியம்.

மனித மூளை மகத்தானது. அதை வீணடித்துக் கோமாவுக்குள் தள்ளிவிடாதீர்கள். அது தான் மனித உலகின் அழிவு.



## அதிபர் எர்டோகன் பற்றி ஆபாச பதில் க்ரோக் ஏஐக்கு தடை விதித்த துருக்கி நீதிமன்றம்

தொழிலதிபர் எலான் மஸ்க்கின் எக்ஸ்(முன்பு ட்விட்டர்) நிறுவனம் அறிமுகப்படுத்திய க்ரோக் ஏஐ. உலகளவில் செயற்கை நுண்ணறிவு தளமான க்ரோக் ஏஐயின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இந்நிலையில் துருக்கியில் க்ரோக் ஏஐக்கு தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. துருக்கி அதிபர் ரெசப் தையிப் எர்டோகன், அவரது மறைந்த தாயார் மற்றும் துருக்கியின் சில ஆளுமைகளுக்கு எதிராக க்ரோக் ஏஐ ஆபாசமான பதில்களை அளித்ததாக புகார் எழுந்தது.

மேலும் நவீன துருக்கியேவின் தந்தை என அழைக்கப்படும் முஸ்தபா கெமால் அதாதுர்க் குறித்தும் அவதூறு பரப்பும் வகையில் பதிலளித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான வழக்கில், பொதுஒழுங்குக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாக பதில்களை கூறி வரும் க்ரோக் ஏஐக்கு, துருக்கி இணைய சட்டங்களின் அடிப்படையில் தடை விதித்து துருக்கி நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)



# இந்தியா-பாகிஸ்தான் போரை நிறுத்தியது டிரம்ப்: அமெரிக்க வெளியுறவு அமைச்சர் புகழாரம்



டிரம்பின் தலைமையின் கீழ் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே போர் ஏற்படுவதை அதிபர் டிரம்ப் தடுத்து விட்டதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைசசர் மார்கோ ரூபியோ புகழாரம் சூட்டினார். அதிபர் டிரம்ப் தலைமையில் அமெரிக்க அமைச்சரவை குழு கூட்டம் வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் டிரம்ப் அருகே அமர்ந்திருந்த வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ அதிபர் டிரம்பை புகழ்ந்து பேசினார்.

அவர் பேசியதாவது:அதிபர் டிரம்பின் தலைமையின் கீழ், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரைத் தடுத்து நிறுத்தியது அமெரிக்கா. அதிபர் அவர்களே, உள்நாட்டில் நிகழ்ந்த இந்த சாதனைகள் அனைத்தையும் இங்கே பட்டியலிடுகிறேன். உங்கள் தலைமையின் கீழ், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரைத் தடுத்து முடித்துள்ளோம். காங்கோ ஜனநாயகக் குடியரசுக்கும், ருவாண்டாவுக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு 12 நாள் போர், இது அமெரிக்க நடவடிக்கையுடன் முடிந்தது. அதே போல் அஜர்பைஜான்–ஆர்மீனியா இடையே ஒரு சமாதான ஒப்பந்தம் விரைவில் ஏற்படும் என்று நம்புகிறேன். சிரியா மற்றும் லெபனான் காரணமாக முழு மத்திய கிழக்கு மற்றும் அதன் உள்கட்டமைப்பு இப்போது மாறக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது. இன்னும் 6 மாதங்கள் கூட ஆகவில்லை. உங்கள் தலைமைக்கும் குழுவிற்கும் இது ஒரு சிறந்த சான்றாகும். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

# சீனாவுக்குள் நுழைய மேலும் 74 நாட்டினருக்கு விசா தேவையில்லை!



சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க விசா இன்றி பயணிக்கும் முறையை மேலும் 74 நாடுகளுக்கு விரிவுப்படுத்தி உள்ளது சீனா. இத்திட்டம் வரும் 30ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதன் மூலம் 30 நாட்கள் வரை அந்நாட்டில் தங்கி கொள்ளலாம். ஆனால் இந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பெறவில்லை.

## ரூ.23 லட்சத்தில் பெறக்கூடிய கோல்டன் விசா குறித்த தகவல் உண்மையில்லை: ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மறுப்பு

*இந்தியர்கள் ரூ.23.30 லட்சம் கட்டணம் செலுத்தி வாழ்நாள் முழுமைக்கான கோல்டன் விசாவை பெறலாம் என்கிற தகவலை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மறுத்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்சின் கோல்டன் விசா பெறுவதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டிருப்பதாக பிடிஐ செய்தி நிறுவனம் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் செய்தி வெளியிட்டது.*

*இதன்படி, ரூ.23.30 லட்சம் கட்டணம் செலுத்தி கோல்டன் விசா பெறலாம் என்றும், இந்த புதிய வகை கோல்டன் விசாவுக்கு முதற்கட்டமாக இந்தியாவும், வங்கதேசமும் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் கோல்டன் விசா பெற விண்ணப்பிக்கும் இந்தியர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய ராயத் குழும நிறுவனம் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டன.*

*பொதுவாக, ஐக்கிய அரபு எமிரேட்சின் கோல்டன் விசா பெற இந்தியர்கள் அந்நாட்டில் ரூ.4.66 கோடி மதிப்புள்ள சொத்தில் முதலீடு செய்ய வேண்டும் அல்லது அங்குள்ள வணிகத்தில் பெரிய தொகையை முதலீடு செய்ய வேண்டும் என விதிகள் கடுமையாக உள்ள நிலையில் ரூ.23 லட்சத்தில் புதிய கோல்டன் விசா பலரையும் கவர்ந்தது.*

*இந்நிலையில் இந்த தகவலை ஐக்கிய அரபு எமிரேட்சின் அடையாளம், குடியுரிமை, சுங்கம் மற்றும் துறைமுக பாதுகாப்புக்கான ஆணையம் (ஐசிபி) மறுத்துள்ளது. இதுதொடர்பாக ஊடக தகவலை நிராகரித்துள்ளது. மேலும், இதற்காக எந்த தனியார் நிறுவனமும் தேர்வு செய்யப்படவில்லை என்றும், கோல்டன் விசாவுக்கான விதிமுறைகள், நிபந்தனைகள் அமைச்சக முடிவுகளின்படி தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பதாகவும் கூறி உள்ளது. இதைத் தொடர்ந்து ராயத் குழுமமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுள்ளது.*

*(ஐ)*

## எக்ஸ் தளத்தின் சி.இ.ஓ. லிண்டா திடீர் ராஜினாமா



பிரபல சமூக வலைதளமான எக்ஸ் தளத்தின் சி.இ.ஓ. லிண்டா யாக்கரினோ திடீர் ராஜினாமா செய்தார். 2023ம் ஆண்டு முதல் எக்ஸ் வலைதளத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்து வந்தார் லிண்டா. லிண்டாவின் ராஜினாமா குறித்து எக்ஸ் வலைதளம் தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

**செம்மணி....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வு நடவடிக்கைகள் இன்றைய தினத்துடன் 24 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மனிதப் புதைகுழியில் இருந்து 63 எலும்புக் கூடுகளும் , "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" மனித புதைகுழியில் இருந்து இரண்டு எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" புதைகுழியில் குழப்பகரமான முறையில் மனித எலும்பு சிதிலங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அனைத்தும் சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட பை , காலணிகள் , கண்ணாடி வளையல்கள் , ஆடையை ஒத்த துணிகள், பொம்மை உள்ளிட்ட பொருட்கள் சான்றுப்பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

**தையிட்டியில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விகாரை அகற்றப்பட்டு, காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் நோக்கத்தோடு நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் காணி உரிமையாளர்கள் , தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், சட்டத்தரணி காண்டீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கீரிமலையில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட அதிரடிப்படையினர் குறித்த வெடிகுண்டை பாதுகாப்பாக மீட்டு சென்றுள்ளனர்.

**பால்மா....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

01 கிலோ பால் மா பொதி ஒன்றின் விலை 250 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

ஹோமாகம பகுதியில் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபரின் தலையில் ஆயுதத்தால் தாக்கப்பட்டதற்கான காயங்கள், கழுத்தில் வீக்கம் மற்றும் கழுத்துக்கு அருகில் இரத்தக் கறைகள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

35 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரை வேறொரு இடத்தில் கொலை செய்துவிட்டு, பின்னர் வாகனத்தில் கொண்டு வரப்பட்டு இந்த இடத்தில் (ஹோமாகம கிளை வீதி) வீசப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான முதற்கட்ட விசாரணைகளை நுகேகொடை பொலிஸ் பிரிவின் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் ஆரம்பித்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஹோமாகம தலைமையக பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு 30 வீதம் வரி விதிப்பு– ட்ரம்ப்பின் அறிவித்தல்!

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 சதவீதம் வரி விதிக்கப்படவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகை இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில் புதிய வரி வீதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குறித்த புதிய வரி விதிப்பு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

முன்னதாக இலங்கை மீது 44 சதவீத வரி அமெரிக்காவால் விதிக்கப்பட்டது.

இந்த முறை அமெரிக்கா அறிவித்த வரி விகிதம் முன்னர் அறிவிக்கப்பட்ட வரி விகிதத்துடன் ஒப்பிடும்போது 14 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக மேலும் ஏழு நாடுகளுக்கு புதிய கடிதங்களை வெளியிடவுள்ளதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று (09) அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## எசல பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாட்டில் 8,355 தானசாலைகள் பதிவு!

*கொழும்பு, ஜூலை 10*

*எசல பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இன்றையதினம் நாடு முழுவதும் சுமார் 8,355 தானசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*இந்த தான சாலைகளை கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி சுகாதாரப் பாதுகாப்பான முறையில் நடத்துமாறு சம்பந்தப்பட்ட அமைப்பாளர்களுக்கு இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குடா அறிவித்துள்ளார்.*

*அத்துடன் இன்று முழுவதும் தானசாலைகள் ஆய்வு செய்யப்படவுள்ளதுடன், இதற்காக சுமார் 2,000 பொது சுகாதார பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## சிக்கனமாக பயன்படுத்துங்கள்

*நாட்டின் பல்வேறு பகுதிகளில் வறட்சியான காலநிலை நிலவுவதால், நீர் நிலைகளின் நீர் மட்டம் குறைவடைந்து வருகின்றதுஃ*

*இதன் காரணமாக, குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*அத்துடன், வெப்பம் காரணமாக மக்களின் நீர்த்தேவையும் அதிகரித்துள்ளது.*

*எனவே, குடிநீர் விநியோகம் குறைவடைந்துள்ளதன் காரணமாக அனைவரும் அத்தியாவசிய மற்றும் அன்றாட தேவைகளுக்கு மாத்திரம்நீரை பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது*

## யாழ். கொக்குவில் சந்தை தொடர்பில் வெளியான அறிவிப்பு!

யாழ்ப்பாணம், கொக்குவில் சந்தை தொடர்பில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் பொதுச் சந்தையில் கடல் உணவுப் பொருட்களை வெட்டுவதற்கு மற்றும் இறால் சுத்தம் செய்வதற்குமான கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அதன்படி,

1 கிலோ கிராம் மீன் வெட்டுவதற்கு 50 ரூபாய்,
1 கிலோ கிராம் நண்டு வெட்டுவதற்கு 50 ரூபாய்,
1 கிலோ கணவாய் வெட்டுவதற்கு 100 ரூபாய்,
1 கிலோ கிராம் சுறா மீன் வெட்டுவதற்கு 100 ரூபாய்,
1 கிலோ கிராம் திருக்கை வெட்டுவதற்கு 50 ரூபாய் ,
1 கிலோ கிராம் பெரிய இறால் சுத்தப்படுத்துவதற்கு 100 ரூபாய்,
1 கிலோ கிராம் சிறிய இறால் சுத்தப்படுத்துவதற்கு 120 ரூபாய் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக கட்டணம் எதுவும் அறவிட முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகமாகக் கட்டணங்கள் அறவிடப்படுமாயின் 021 2222700 அல்லது 0212221178 என்ற இலக்கங்களூடாக பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. மேலதிக கட்டணம் அறவிடப்பட்டமை விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டால், உரியவர்களுக்கு எதிராகப் பிரதேச சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழைச்சேனையில் போதைப்பொருள் வியாபாரி கைது

நீண்ட காலமாக போதை பொருள்வியாபாரம் செய்து வந்த வியாபாரி வியாழக்கிழமை அன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

மூன்று நாள் தொடர் முயற்சியினால் வாழைச்சேனை பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வுப்பிரிவினரின் கூட்டு முயற்சியினாலும் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலன்னறுவையை சேர்ந்த பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவர் வியாழக்கிழமை (10) அன்று அதிகாலை புனாணை, ரிதிதென்ன பிரதேசத்தில் வைத்து போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வியாபாரி கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து போதைப் பொருட்களைக் கொண்டு வந்து கல்குடாப்பிரதேசத்தில் விநியோகித்து வந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 5,320 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும்100 கிராம் கேரளா கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரையும் சான்றுப்பொருட்களையும் சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# கந்தளாய் வைத்தியசாலைக்கு பிரதி அமைச்சர் விஜயம்



கொழும்பு, ஜூலை 10

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான அருண் ஹேமசந்திர, கந்தளாய் தள வைத்தியசாலைக்கு புதன்கிழமை மாலை திடீர் விஜயம் மேற்கொண்டார்.

வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நேரடியாக கண்டறிவதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் என்பதுடன் இந்த விஜயத்தின் போது, கந்தளாய் தள வைத்தியசாலையின் மருந்துப் பற்றாக்குறையைத் தடுப்பதற்கான முக்கிய அறிவிப்பை அமைச்சர் வெளியிட்டார்.

அடுத்த ஆண்டுக்கு தேவையான மருந்துகளை இந்த ஆண்டிலேயே இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்ததுடன் இதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மருந்துத் தட்டுப்பாட்டை முன்கூட்டியே தவிர்த்து, நோயாளிகளுக்குத் தடையற்ற மருந்து விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்

மேலும், சுகாதாரத் துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அருண் ஹேமசந்திர உறுதியளித்தார். குறிப்பாக மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் ஏனைய மருத்துவ ஊழியர்களின் பற்றாக்குறை சுகாதார சேவைகளில் பெரும் சவாலாக இருப்பதை அவர் ஒப்புக்கொண்டார். இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுவதன் மூலம் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விஜயத்தின் போது கந்தளாய் தள வைத்தியசாலை அத்தியட்சகர் உதார குணதிலக்க மற்றும் வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2025 வெளியிடப்பெற்றது.